**பாலிந்தநுவர பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாலிந்தநுவர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாலிந்தநுவர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் நியமத்தின் 3.27 ஆம் பிரிவு முதல் 3.32 ஆம் பிரிவு வரையான பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |
| • செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டிற்கான சரியான மிகையான ரூபா 10,959,596 காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 1,296,934 ஆக காண்பிக்கப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 9,662,662 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| • முற்பணமாக கிடைத்த வருமானங்களின் அதிகரிப்பு ரூபா 6,150 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது நிதி செயற்பாட்டிலிருந்தான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நியமத்தின் 6.10 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கிரயத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் இழிவுப் பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் பெறப்படுகின்ற பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிட வேண்டியிருந்தமையால் இழிவுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியம் ரூபா 9,662,662 விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தலிருந்து கிடைத்த மானியமாக காண்பிப்பதற்கு பதிலாக 2021 ஆம் ஆண்டின் மூலதன செலவின மானியப் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியம் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவுகள் ரூபா 47,814,639 காண்பிக்க்பபட்டதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 38,151,977 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்கான மூலதன செலவின மானிய பெறுவனவுகள் ரூபா 47,814,639 விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தில் காண்பிக்கப்படாமையால் ஆண்டிற்கான விரிவான வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஆண்டில் கிடைத்த மூலதன மானியம் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்திற்காக மீளாய்வாண்டின் சரியான மிகையான ரூபா 10,959,596 சீராக்குவதற்குப் பதிலாக விரிவான வருமானமாக ரூபா 1,296,934 காண்பிக்கப்பட்டமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா --- குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சபை கணக்குகள் தயாரிக்கும் திரண்ட நிதியக் கணக்கை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திரண்ட நிதியக் கணக்கில் ஆண்டின் மிகை சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தகப் பெறுமதி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கிரயம் ரூபா 377,044,473 நடைமுறையல்லா சொத்துக்களின் கீழும் பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கின் மீதி ரூபா 18,277,011 உரிமை மூலதனத்தின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தின் போது சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தகப் பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் புதிய அலுவலகக் கட்டிடம் மற்றும் கேட்போர் கூடம் ரூபா 37,176,000 தொகையில் | எதிர்காலத்தில் தனித்தனியாக மதிப்பீட்டைப் பெற்று சரி செய்யப்படும். | மதிப்பீட்டுப் பெறுமதி சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 29,459,443 ஆக ரூபா 7,716,557 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

### 1.6.3 அதிகாரப் பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 நவம்பர் 12 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண அரச சேவைக்காக தற்காலிக, அமைய (நாளாந்த) நாட்கூலி ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஊழியர்கள் பதவியணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தைப் பெற்று சேர்க்க முடியுமாக இருந்த போதும் உரிய நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னராக இருந்தும் அவ்வாறு அங்கீகாரம் இன்றி 2019 யூன் மாதம் 12 ஊழியர்கள், 2020 திசெம்பர் மாதம் 21 ஊழியர்களுமாக 33 ஊழியர்கள் சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். அதற்காக சேர்க்கப்பட்ட திகதி முதல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 33 ஊழியர்களுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 26,287,550 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் ஆட்சேர்க்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,111,572 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,572,270 ஆகும்.

## 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினடமிருந்தும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,500,000 மற்றும் 2019 முதல் 2021 வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 13,460,695 ஆகும். | நீதிமன்ற தண்டப்பணம் தற்போது தயாரித்து பரீட்சிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டண பட்டோலை பரீட்சிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதுரலிய சந்தை 2013 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கும் போது வாடகையாக அறவிட வேண்டிய ரூபா 108,599 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை முன்னாள் சபையின் செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2018 சனவரி 03 ஆந் திகதிய LGN/6/4/1/P29/1 என்ற கடிதத்தில் அறிவிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி ஆணையாளரின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 25,290,000 ஆன 36 காணிகளும், ரூபா 95,764,950 ஆன 09 கட்டிடங்களும் மீள் மதிப்பீடு செய்யப்படாமல் கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எல்லையினை தீர்த்து வைக்க முடியாத காணிகள் மற்றும் காணிகள் அமைந்துள்ள கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்த கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | பொருள் மெய்மையாய்வு இன்றி பரிந்துரையின்றி மீளாய்வாண்டில் ரூபா 152,500 ஆன சொத்துக்கள் அகற்றப்பட்டமையால் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைவடைந்திருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சரி செய்யப்படும். | பொருள் மெய்மையாய்வு பரிந்துரையின் பிரகாரம் சொத்துக்கள் அகற்றப்படல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய ரூபா 4,000,000 பெறுமதியான 19 ஏக்கர் 01 றூட் 20 பேர்ச் அளவான தகமுல்ஹேன காணி 2021 இல் சொத்துக்கள் மெய்மையாய்வின் போது பௌதீக ரீதியாக கண்டறிவதற்கு முடியாதிருந்தது. | மேலும் பரீட்சித்து தகவல்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய சகல காணிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,400,000 பெறுமதியான மாரககெகதெனிய சந்தைக்குரிய காணி, கம்சபா நீதிமன்றம் அமைந்துள்ள நாரகக்பக்ஹேன காணி மற்றும் மெல்லகஹமூக்கலான கட்டிடத்திற்குரிய காணி என்பன 2021 இன் சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மேலும் பரீட்சித்து தகவல்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய காணிகளின் உரித்தை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |